# <u>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்</u>

**(சுருக்கம்)**

படிகள் – பழைய ஊதிய விகிதத்தின் அடிப்படையில் **01.12.2007**க்கு முந்தைய ஊதிய விகிதம் மற்றும் **01.12.2015**க்கு முந்தைய ஊதியம் மற்றும் தர ஊதியம் அடிப்படையில் அகவிலைப்படியை பெற்றுவரும் பணியாளர்களுக்கு **01.01.2022** முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

<u>(நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண். 12, நாள் 20.01.2022.</u>

தை 7–ம் நாள்,
பிலவ வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2053

<u>படிக்கப்பட்டது:</u>

1) (நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.206, நாள் 14.11.2019.
2) (நிலை) வாரிய செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்.9, (செயலகக்கிளை) நாள் 02.03.2018.
3) (நிலை) வாரிய செயல்முறை ஆணை (முழுவாரியம்) எண்.10, (செயலகக்கிளை) நாள் 02.03.2018.
4) (நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.06, நாள் 12.01.2022.
5) அரசு ஆணை (நிலை) எண்.4 நிதி (படிகள்)த் துறை, நாள் 01.01.2022.

*****

பார்வை 1–ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஆணையில், பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் பணியாளர்களுக்கு 01.07.2019 முதல் அகவிலைப்படியை 312 சதவீதமாக மற்றும் 164 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

2. பார்வை 2 மற்றும் 3–ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஆணையில் 01.12.2015 முதல் புதிய ஊதிய விகிதம் வழங்க ஆணையிடப்பட்டது. பார்வை 4 ல் புதிய ஊதிய விகிதத்தில் ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.01.2022 முதற்கொண்டு திருத்தப்பட்ட அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்தில் 17 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

3. பார்வை 5-ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில் ஐந்தாவது ஊதியக் குழுவின் அடிப்படையில் 2006-ல் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் மாநில அரசு பணியாளர்களுக்கு 01.01.2022 முதல் அகவிலைப்படியை 312 சதவீதத்திலிருந்து 368 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், ஆறாவது ஊதியக் குழுவின் அடிப்படையில் 2016 ல் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் தர ஊதியம் பெற்று வரும் மாநில அரசு பணியாளர்களுக்கு 01.01.2022 முதல் அகவிலைப்படியை 164 சதவீதத்திலிருந்து 196 சதவீதமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 01.01.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்திற்கு 2006-ல் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் மற்றும் 2016 ல் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் தர ஊதியம் பெற்று வரும் மாநில அரசு பணியாளர்களுக்கு 312% மற்றும் 164% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் அரசாணையைப் பின்பற்றி, பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் தர ஊதியம் பெற்று வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகப் பணியாளர்களுக்கு அகவிலைப்படியை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடப்படுகிறது :-

| 01.12.2007 க்கு முன் ஊதிய விகிதம் | | 01.12.2015 க்கு முன் அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியம் | |
|---|---|---|---|
| எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
| 01.01.2022 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலை ஊதியத்தில் 312% லிருந்து 368% (56 சதவீதம் உயர்த்தப்படுகிறது) | 01.01.2022 முதல் | அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 164% லிருந்து 196% (32 சதவீதம் உயர்த்தப்படுகிறது) |

5. மேற்காணும் உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியானது, பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம், தர ஊதியம் மற்றும் படிகள் பெற்று வரும் வாரியத்தின் தொழிலாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு 01.01.2022 முதற்கொண்டு கணக்கிடப்பட்டு பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் வழங்கப்படும். மேலும் 01.01.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்திற்கு 01.12.2007 க்கு முன் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் படிகள் மற்றும் 01.12.2015 க்கு முன் பழைய ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்து ஊதியம் மற்றும் தர ஊதியம் பெற்று வரும் வாரியத்தின் தொழிலாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு 312% மற்றும் 164% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

6. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

**(தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் ஆணையின்படி)**

**ஜி.சின்னநாகூர்**
**செயலாளர்(பொ)**

பெறுநர்

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்/பொது/வருவாய்.
தலைமை உட்தணிக்கை அலுவலர்/தணிக்கைக் கிளை.
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்.
அனைத்து துணைச் செயலாளர்கள், செயலகக்கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்).
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

**நகல்:-**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பார்வைக்கு.
காவல் துறை இயக்குநர்/விழிப்புப்பணி
மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
அனைத்து இயக்குநர்கள்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
செயலாளர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்/சென்னை-2.
சட்ட ஆலோசகர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
நிறுவன செயலாளர் /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
செயலாண்மை உதவியாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக் கிளை.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்கள்/நிர்வாகக் கிளை.
தொழில் உறவு ஆலோசகர்.
இயக்குநர்/தமிழ்நாடு மின்வாரிய பதிப்பகம்.
இயக்குநர்/கணினி மையம்.
தலைமை மருத்துவ அலுவலர், தலைமையிட மருந்தகம்.
தொழில் உறவு அலுவலர்.
அனைத்து அலுவலர்கள், பிரிவுகள்/செயலகக்கிளை.
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
உறைவிட மேலாளர்/புதுதில்லி.
உதவி பணித்தொகுதி அலுவலர்/தமிழ் வளர்ச்சி/த.நா.மி.வா. இதழில் பிரசுரிப்பதற்காக.
அ-2, அ-8, அ-9, அ-10, அ-11, அ-12, அ-13 மற்றும் அ-19 பிரிவுகள்/செயலகக்கிளை
டி.என்.எப்.சி – டவர் எண்.490/3-4, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-35
தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, ஈ.வி.கே.சம்பத் மாளிகை, 5 வது மாடி, கல்லூரி சாலை, சென்னை-6.
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம், சிட்கோ நிறுவன அலுவலக கட்டிடம், திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி , சென்னை-600 032.

..4..

தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின்வாரிய கணக்காயர் மற்றும் களத்தொழிலாள்ர் சங்கம்.
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.
மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (இரண்டு பிரிவுகள்)
தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்.
தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் கழகம்.
தமிழ்நாடு மின் வரிய நிதி மற்றும் கணக்கு அலுவலர் சங்கம்.
பாரதீய மின் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின் வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்.
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் யூனியன்.
தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

**//உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//**

A. Jayeethi

பிரிவு அலுவலர்